முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 487, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

487—

குளிர்பதனக் கிடங்கு

***1063—திரு. டி. இராமச்சந்திரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியில் கொய்மலர்களைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) தளி தொகுதியில் விளையும் கொய்மலர்களைப் பாதுகாக்க குளிர்பதனக் கிடங்கு அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை என மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.*

திரு. ஏ. லாசர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், தேனி நகரத்தில் மிகப் பெரிய சந்தை இருக்கிறது. அங்கு ஏராளமான காய்கறிகள், தக்காளி போன்ற பழங்கள் வருகின்றன. அந்த வட்டாரத்திலேயே மிகப் பெரிய மார்க்கெட்டில், வாரத்தில் 2 நாள் சந்தை இருக்கக்கூடிய அந்தப் பகுதியில், உற்பத்தியாகும் காய்கறிகள், பூக்கள் போன்றவற்றைப் பாதுகாத்து வைப்பதற்கான குளிர்சாதன வசதியுடன்கூடிய கிடங்கு இல்லை. எனவே, வேளாண் துறையின் சார்பாக குளிர்சாதன

வசதியுடன்கூடிய கிடங்கு அமைக்கப்படும் என்றால், அது அந்தப் பகுதியில் விவசாயிகள் உற்பத்தி செய்யும் விளை பொருட்களைப் பாதுகாத்து வைப்பதற்கு வசதியாக இருக்கும். அதனால், நல்ல விலை கிடைக்கவும் வழி இருக்கிறது. அதுகுறித்து துறை சார்பாக நடவடிக்கை எடுக்கப்படுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. செ. தாமோதரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்திலே எந்த அளவிற்கு காய்கறிகள் உற்பத்தியாகின்றன, காய்கறிகள் மீதமாகி, பாதிப்பு ஏற்படுகிறதா அல்லது விவசாயிகள் எந்த அளவிற்குப் பாதிப்படைகிறார்கள் என்பனவற்றை அறிந்து, தேவையிருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படும் என மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 488, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

488—

கூடுதல் நிதி ஒதுக்கீடு

__8024__—__திரு. எம். ஆறுமுகம்:__

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தொடக்க கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகளை மேம்படுத்த கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜூ, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*